## கவிதைப் போட்டி -9
## நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (8)

தூங்கும்போது வருவதால் கனவு – உன்னை
தூங்கவிடாமல் இருப்பதை கனவு எனறார் அய்யா கலாம்
நாளுக்கு நாள் வாழக்கைப் படி!
குறைந்து கொண்டே இருக்குத்தடி!
ஆனால் நீயோ.....

புலனத்தில் பண்டு இருக்கின்றாய்
படவரியில் பதமாய் பதிந்து
வலையொளியில் வசமாய் வளைந்து
தொலைவரியில் புதிய படத்தின் இனைப்பிற்காய் தொலைந்து இருக்கின்றாய்

உனக்கோ! உன்னைப் பற்றியும் கவலையில்லை
உன் ஊரைப் பற்றியும் கவலையில்லை
பற்றியத்தில் பற்றாக்குறையில்லாமல் நேரத்தை செலவிட்டு
கீச்சகத்திலும் உன் கீச்சுக்களை அனுப்புகிறாய்....

இதுதான் உன் இலட்சியமா? இதுதான் உன் கனவா?
முதியோர் இல்லத்தின் ஓர் குரலொளி
இன்னும் காதினில் அலறுதடி
பெரிய பிள்ளை மேல் தெருவில்
சிறிய பிள்ளை கீழ் தெருவில்
நானோ நடுத்தெருவில்.......!
இதுதான் உன் படிப்பறிவா?
இதுதான் உன் ஒழுக்க நெறியா?
வீறுகொள் ! துணிந்து நில் எனக் கூறியது
உன் மடமையை போக்க - தவிர
உன் சுற்றத்தை வெறுக்க அல்ல
கனவு காணுங்கள் - கனவு காணுங்கள்

உன்னால் நாலுபபேருக்காவது உதவ கனவு காணுங்கள்
உன் சுற்றுப்புறத்தை மாற்ற கனவு காணுங்கள்
உன் சமூகத்தை மாற்ற கனவு காணுங்கள்
உன் நாட்டினை மாற்ற கனவு காணுங்கள்
உலகின் மிகச்சிறந்த நிம்மதி உணர்வு
மற்றவர்க்கு நீ அதை செய்வதில் மலரும்

*****************